06.03.2026

## 4 பெரிய மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிய மகாராஷ்டிரா, முன்னேறிய தமிழகம்

- இந்தியாவின் நான்கு மிகப் பெரிய பொருளாதார மாநிலங்களில் கடந்த 4 ஆண்டுகளில் மகாராஷ்டிர மாநிலம் மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- அதேவேளையில், ஒட்டுமொத்தப் பொருளாதார மதிப்பில் (GSDP) அந்த மாநிலமே இப்போதும் முதலிடத்தில் நீடிக்கிறது.
- 2024-25 நிதியாண்டில் மகாராஷ்டிராவின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி ரூ.42,67,771 கோடி என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இருப்பினும், வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் பார்த்தால், கர்நாடகம், குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களை விட இம்மாநிலம் பின்தங்கியுள்ளது.

**கர்நாடகம் முதலிடம்**

- கர்நாடக மாநிலம் சுமார் 65 சதவீத வளர்ச்சியுடன் முதலிடத்தில் உள்ளது.

**இரண்டாவது இடத்தில் குஜராத்**

- தொழில்துறை மற்றும் உறபத்தித் துறையில், வலுவாக உள்ள குஜராத் மாநிலம், 48 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

**தமிழகத்துக்கு மூன்றாவது இடம்**

- ஒட்டுமொத்தப் பொருளாதார அளவில் மகாராஷ்ட்ராவுக்கு, அடுத்தபடியாகத் தமிழகம் நெருக்கமான போட்டியாளராக உருவெடுத்துள்ளது.

## ஐ.நா.வின் 'உலகப் பெண் உழவர் ஆண்டு' – 2026 உழவுத் தொழிலில் மகளிர் : அங்கீகாரத்துக்கான தருணம்

**கணக்கில் வராத பெண்கள்**

- தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகெங்கிலும் பெரும்பாலும் பெண்களே வேளாண்மையின் முதுகெலும்பாக உள்ளனர்.
- வீட்டிலும் நாட்டிலும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்கிறார்கள்.
- எனினும், அவர்களது பங்களிப்பு முறையாக அங்கீகரிக்கப்படுவதில்லை.
- அவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை.
- நில உரிமைகளும் பெயரளவிலேயே இருக்கின்றன.
- மேலும் கடன் வசதிகள், தொழில்நுட்பம், சந்தை வாய்ப்புகள் பெரும் சிரமத்துக்குப் பின்னரே கிடைக்கின்றன.
- பல தலைமுறைகளாக, பெண்கள் 'உழவர்கள்' என்று பெயர் பெறாமலேயே நிலத்தில் உழவு செய்துவருகின்றனர்.

**சம வாய்ப்பு அளித்தால்...**

- பெண்கள் விளைச்சலுக்காக மட்டும் சாகுபடி செய்வதில்லை.
- ஊட்டச்சத்து, நீடித்த எதிர்கால உணவுக்காக வேளாண்மை செய்கிறார்கள்.
- அவர்களின் தேர்வுகள், எதை நட வேண்டும், எதைச் சேமிக்க வேண்டும்.
- எப்படிக் குடும்பத்துக்கு உணவளிக்க வேண்டும் என்பதாக உள்ளது.
- அவர்கள் அது சார்ந்த அறிவைக் கொண்டிருக்கிறார்கள்.
- சுற்றுச்சூழல் பற்றிய புரிதலையும் பொறுப்புணர்வையும் கொண்டவர்களாகப் பெண்கள் இருக்கின்றனர்.
- இந்த அறிவு திடீரென வந்துவிடவில்லை.
- இது பல நூற்றாண்டு அனுபவத்தால் வடிவமைக்கப்பட்ட, மிகவும் மேம்பட்ட தகவமைப்பு கொண்ட நுண்ணறிவு.
- பல ஆய்வுகள் தொடர்ந்து ஓர் உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றன.
- வேளாண்மையில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கு நிலம், வளங்கள், அறிவு, சந்தை போன்ற வாய்ப்புகள் திறந்துவிடப்படும்போது, உற்பத்தி உயர்வு தெளிவாகத் தெரிகிறது.
- பெண் உழவர்கள் ஏற்கெனவே நிலத்தில் மிகுதியாக உழைக்கிறார்கள்.
- கூடவே தரமான விதைகள், உரிய கருவிகள், பயிற்சி, கடன் வசதிகள் கிடைத்தால், அவர்களது உழைப்பின் பலன் இன்னும் முழுமையாக வெளிப்படும்.
- பல நாடுகளில் நடைபெற்ற ஆய்வுகள் பண்ணை உற்பத்தி 20-30% வரை அதிகரிக்கும் எனக் காட்டுகின்றன.
- இது புதிய நிலத்தைச் சுரண்டாமல், ஏற்கெனவே உள்ள நிலத்திலேயே அதிக விளைச்சலை உருவாக்கும் வளர்ச்சியாகும்.
- அடுத்ததாக, வீட்டின் பசி நேரடியாகக் குறைகிறது.



| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI |
|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 |

- பெண்கள் வேளாண்மையில் பெறும் வருமானம் உற்பத்தியைத் தாண்டி, முதலில் வீட்டின் உணவாக மாறுகிறது.
- பாலின வருமான ஒப்பீட்டைப் பொறுத்தவரை குடும்பத்தின் பசி பெண்ணின் வருமானத்தால் கணிசமாகக் குறைகிறது.
- பெண் உழவர்களுக்கு வரும் வருமானமானது குடும்ப நலன், ஊட்டச்சத்து, சுகாதாரம், குழந்தைகளின் கல்வி ஆகியவற்றில் முதலீடு செய்யப்படுகிறது.
- இவை அனைத்தும் அரசின் எந்த ஒரு குறுகிய கால மானியத்தாலும் ஈடுசெய்ய முடியாத, தலைமுறைக்கான நலத்தையும் வருமானத்தையும் உருவாக்குகின்றன.

**காலநிலை மாற்றமும் பெண்களும்**

- காலநிலை மாற்றக் கண்ணோட்டத்தில் அணுகும்போது, பெண் உழவர்களின் பங்கு மேலும் முக்கியமாகிறது.
- நீடித்த, உயிர்ம வேளாண்மையை நடைமுறைப்படுத்தப் பெண் உழவர்கள் பலவகைப் பயிர்கள், பன்மைப் பயிர்கள் (multi cropping & diverse crops), உள்ளூர் விதைகள் (local seeds), வெளி இடுபொருள் குறைவான வேளாண் முறைகள் (low-external input systems) போன்றவற்றை இயல்பாகக் கையாளுகிறார்கள்.
- இந்த நடைமுறைகள் பழங்காலத்தின் வழிமுறைகள் அல்ல.
- எதிர்காலத்துக்கான வரைபடங்கள், பல நாடுகளில் மீள்தன்மையைத் தேடும் பொருளாதார அமைப்புகள் இந்த நடைமுறைகளை வரவேற்று ஏற்றுக்கொள்கின்றன.
- ஒரு ஏக்கருக்குக் கிடைக்கும் விளைச்சல் என்கிற ஒரே அளவுகோலால் மட்டுமே உற்பத்தித் திறனை நவீன வேளாண்மை மதிப்பிடுகிறது.
- அதில் மண் வளத்தின் நீடித்த தன்மை, உணவின் ஊட்டச்சத்துத் தரம், உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு, சமூக அறம் போன்ற அடிப்படை மதிப்பீடுகள் புறக்கணிக்கப்படுகின்றன.
- இந்தப் பார்வையால் பெண் உழவர்களின் விளைபொருள்கள், ஏற்றுமதிப் பட்டியல்களில் அல்லது பொருளாதார அறிக்கைகளில் இடம் பெறாமல் போகலாம்.
- ஆனால், அவை குடும்பத்துக்கான அன்றாட உணவுத் தட்டுகளில், குழந்தைகளின் ஆரோக்கியத்தில், சமுகத்தின் உணவுப் பாதுகாப்பில் ஓசையே இல்லாமல் ஆனால் உறுதியுடன் தங்களைப் பதிவு செய்கின்றன.

**மறைவான அரசியல்**

- பெண்களின் உழைப்பு குறைவாக மதிப்பிடப்படுவதால்தான் நம் நாட்டில் உணவு மலிவான விலையில் கிடைக்கிறது.
- இந்த மலிவு விலை இயற்கையானது அல்ல.
- உண்மையிலேயே, பெண் உழவர்களின் அனைத்து உழைப்புக்கும் சந்தை விலை கிடைத்தால், உணவுப் பாதுகாப்பின் உண்மையான செலவு வெளிப்படும்.
- இப்போது நமக்குக் கேள்வி எழுகிறது.
- இந்தக் கூடுதல் செலவை யார் ஏற்றுக்கொள்வார்கள்? நுகர்வோரா, அரசா, அல்லது சந்தை அமைப்புகளா? இவர்களில் யாரும் இல்லை.
- அந்தச் சுமை முழுவதும் கடைநிலையில் உள்ள பெண் உழவர்களின் தோள்களில்தான் சுமத்தப்படுகிறது.
- அதுவும் குறைந்த ஊதியமாக அழுத்தப்படுகிறது.
- பெண் உழவர்களை ஊக்குவிப்பதற்காகச் செய்யப்படும் செலவு என்பது ஒரு சமூகத்துக்கு மிகுந்த பலன் தரக்கூடிய முதலீடுகளில் ஒன்றாகும்.
- இது உணவுப் பாதுகாப்பு, கிராமப்புற வாழ்வாதாரங்கள், சுற்றுச்சூழல் வளங்குன்றாத தன்மை, சமூக சமத்துவம் ஆகிய அனைத்தையும் ஒரே நேரத்தில் வலுப்படுத்துகிறது.
- இந்தியாவில் 70% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர்.
- அதில் 60% பேர் வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.
- இவர்களில் 50% பெண்கள், அவர்களது உழைப்பு கணிசமானது.
- இவ்வளவு பெரிய உற்பத்தி சக்தி புறக்கணிக்கப்படவது அநீதி அல்லவா?

**அங்கீகாரமும் மாற்றமும்**

- இங்கு கேட்கப்பட வேண்டிய கேள்வி – பெண் உழவர்களுக்கு அங்கீகாரம் அளிக்க முடியுமா என்பதல்ல.
- அதை இன்னும் எவ்வளவு காலம் நாம் செய்யாமல் இருக்கப்போகிறோம் என்பதுதான்.
- ‘உலகப் பெண் உழவர் ஆண்டு – 2026’ என்பது ஓர் அங்கீகாரம் மட்டுமல்ல.
- இது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார மாற்றம்.
- வேளாண்மையில் பெண்களின் உழைப்புக்கான கண்ணியத்தை மீட்டெடுக்கும் முயற்சி.

SURESH'